**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 2021–2022 – ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்கள், காப்பாளினிகளுக்கு 3 நாட்கள் புத்தாக்கப் பயிற்சி வழங்க நிதி ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி2) துறை**

**அரசாணை (நிலை) எண்.41** நாள் 31.05.2022

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, வைகாசி–17

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.1, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை, நாள் 05.01.2022.
2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.பி3/5704/2021, நாள் 01.02.2022.

**ஆணை:–**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் 2021–2022 – ஆம் ஆண்டிற்கான அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர், காப்பாளினிகளுக்கு தங்கள் விடுதிகளை சிறந்த முறையில் பராமரிப்பு செய்திடவும் திறம்பட நடத்திடவும் சென்னையிலுள்ள அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியில் ரூ.49,55,000/– செலவில் மூன்று நாட்கள் புத்தாக்க பயிற்சி வழங்க நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் காப்பாளினிகளுக்கு சென்னையிலுள்ள அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியின் மூலமாக பயிற்சி கட்டணம் ரூ.39,90,000/–மற்றும் போக்குவரத்து செலவினம் ரூ.9,65,000/–ஆக மொத்தம் ரூ.49,55,000/–ஐ செலவில் மூன்று நாட்கள் புத்தாக்க பயிற்சி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

/த.பி.பா/

3. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்/காப்பாளினிகளுக்கு சென்னையிலுள்ள அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியின் மூலமாக மூன்று நாட்கள் புத்தாக்க பயிற்சி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு ரூ.49,55,000/-க்கு (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்) (பயிற்சி கட்டணம் ரூ.39,90,000/- + போக்குவரத்து செலவினம் ரூ.9,65,000/-) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

4 மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

<u>பயிற்சி கட்டணம் (ரூ.39,90,000/-)</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 - கல்வி - மாநிலச் செலவினங்கள் - AA- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் - 372 - பயிற்சி- 01- பயிற்சி"

(IFHRMS த.தொ.கு-2225-03-277-AA-37201)

<u>போக்குவரத்து செலவினம் (ரூ.9,65,000/- )</u>

" 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 - கல்வி - மாநிலச் செலவினங்கள் - AA- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் - 304 - பயணச் செலவுகள்-01- சுற்றுப்பயணப்படிகள்"

(IFHRMS த.தொ.கு- 2225-03-277-AA-30401)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.49,55,000/-, 2022-2023-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்படி செலவினம் ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (பி.மி.பி(ம)சிந/வ.செ.பொது-1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.24084/நிதி(பி.மி.பி(ம)சிந)/2022, நாள் 24.05.2022 –இல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.220 (இரு நூற்று இருபது).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–05.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்,
சென்னை–05.
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை–05.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–08.
மாநில கணக்காயர், சென்னை–18.

நகல்:–
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை
அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–09.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–09.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
நிதி(பி,மிபி(ம)சிந/வ.செ.பொ.I/II)த் துறை,
தலைமைச்செயலகம், சென்னை–09.
இருப்புக் கோப்பு / உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/5/22
பிரிவு அலுவலர்